**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC. 740/2022**
**Prosecution Witnesses: 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜோதி | Caste | : |
| Father Name/ Husband Name | : நாகராஜன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(15.10.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் திருமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன நாகராஜன் எனது கணவர் ஆவார். கடந்த 16.02.2021 அன்று எனது கணவர் பணி நிமித்தமாக மதுரையில் இருக்கும் அவரது Head Office க்கு பணிக்காக சென்றுவிட்டு மீண்டும் திரும்பி திருமங்கலத்திற்கு வந்து இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது தனக்கன்குளம் பகுதியில் இருந்து வந்த காரானது எனது கணவர் சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது என அங்கு உள்ள நபர் போன் மூலம் எனக்கு தகவல் கூறினார். நான் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை சென்று எனது கணவரை பார்த்த போது எனது கணவருக்கு சுயநினைவு இல்லை. எனது கணவருக்கு முகம் முழுவதும் காயம் இருந்தது. ஒரு கால் ஒடிந்தநிலையில் இருந்தது. மேற்கூறிய தேதியில் மதியம் 2.30 மணியளவில் மருத்துவமனையில் சேர்த்துள்ளார்கள். அன்று இரவு நேரத்தில் எனது கணவர் இறந்துவிட்டதாக மருத்துவர் கூறினார். விபத்து சம்பந்தமாக நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான்.

புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து ஏற்படுத்திய காரை பாலாஜி என்பவர் ஓட்டிவந்ததாக கேட்டு தெரிந்து கொண்டேன். அவர் சிட்கோவில் கம்பெனி வைத்து நடத்தி வருவதாக கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC. 740/2022**
**Prosecution Witnesses: 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : மோகன்தாஸ் | Caste | : |
| Father Name/ Husband Name | : பவுல் ஆசிர்வாதம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(15.10.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் திருத்தங்கல்லில் குடியிருந்து வருகிறேன். நான் ஈ.பியில் பணி செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன நாகராஜ் என்பவரும் நானும் ஒரே வீட்டில் திருமணம் செய்துள்ளோம். கடந்த 16.02.2021 அன்று மதியம் 2.30 மணியளவில் நாகராஜ் பணி செய்த அலுவலகத்தில் இருந்து ஒருவர் எனக்கு போன் செய்து நாகராஜுக்கு விபத்து ஏற்பட்டுவிட்டது என்றும் நீங்கள் உடனே கிளம்பி வாருங்கள் என்றும் கூறினார்கள். நான் அரசு ராஜாஜி மருத்துவமனையில் வைத்து நாகராஜனை பார்க்கும் போது அவருக்கு பின்னந்தலையில் பலத்த காயமும் ஒரு கால் ஒடிந்தநிலையிலும் இருந்தது. அவர் பேச இயலாத நிலையில் இருந்தார். அன்று இரவு 1 மணியளவில் நாகராஜ் இறந்துவிட்டார். மதுரையில் இருந்து வரும்போது போர்டு கம்பெனி அருகே விபத்து ஏற்பட்டதாக தெரிந்துகொண்டேன். காரின் ஓட்டுனர் யார் என்று எனக்கு தெரியவில்லை. விபத்து சம்பந்தமாக நாகராஜின் மனைவி அ.சா.1 புகார் கொடுத்தார். அந்த புகாரில் நான் அறிவேன் சாட்சிக் கையெழுத்து போட்டேன். அந்த 1வது அறிவேன் சாட்சிக்கையெழுத்து

அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC. 740/2022**
**Prosecution Witnesses: 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : முகமது அன்சாரி | Caste | : |
| Father Name/ Husband Name | : முகமது இப்ராகிம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(15.10.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் திருமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சாலை ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன நாகராஜ் என்பவர் எனது அலுவலக இளநிலை உதவியாளராக பணி புரிந்தார். கடந்த 16.02.2021 அன்று மதியத்திற்கு மேல் நாகராஜ் Head Office க்கு வந்துவிட்டு மீண்டும் திருமங்கலம் செல்லும் வழியில் தனக்கன்குளம் உள்ள அட்சயா போர்டு கார் கம்பெனி அருகே விபத்து ஏற்பட்டதாக எங்களுக்கு தகவல் தெரிந்து நாங்கள் அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு சென்று நாகராஜனை பார்க்கும் போது அவருக்கு பின்னந்தலையில் பலத்த காயமும் ஒரு கால் ஒடிந்தநிலையிலும் இருந்தது. அவர் பேச இயலாத நிலையில் இருந்தார். அன்று இரவு 1 மணியளவில் நாகராஜ் இறந்துவிட்டார். காரின் ஓட்டுனர் யார் என்று எனக்கு தெரியவில்லை. விபத்து சம்பந்தமாக நாகராஜின் மனைவி அ.சா.1 புகார் கொடுத்தார். அந்த புகாரில் நான் அறிவேன் சாட்சிக் கையெழுத்து போட்டேன். அந்த 2வது அறிவேன் சாட்சிக்கையெழுத்து

அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை